# Inna Narpathu – இன்னா நாற்பது

இன்னா நாற்பது என்னும் நூல் கபிலர் என்னும் புலவரால் இயற்றப்பட்டது. நாற்பத்தொரு பாடல்களைக் கொண்ட இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என அழைக்கப்படும் சங்கம் மருவிய காலத் தமிழ் நூற்றொகுதியுள் அடங்குவது. உலகத்தில் கூடாதவை என்னென்ன என்பது பற்றிக் கூறி நீதி உரைப்பது இந்நூல். இது கி. பி. நான்காம் நூற்றாண்டைச் சார்ந்த நூலாகும். இந்நூல் இன்னிசை வெண்பாக்களால் ஆனது. இதில் நூற்று அறுபத்து நான்கு கூடாச் செயல்கள் கூறப்பட்டுள்ளன.

## எடுத்துக்காட்டு

அறிவிற் சிறந்தவர்கள் வீற்றிருக்கின்ற சபையிலே அறிவில்லாத ஒருவன் புகுவது துன்பத்தைத் தரும். இருட்டிய பின்னர் வழியிற் செல்வது பெரிதும் துன்பம் விளைவிக்கும். விளையக் கூடிய துன்பங்களைத் தாங்கக் கூடிய ஆற்றல் இல்லாதவர்களுக்குத் தவம் துன்பம் தரும். தன்னைப் பெற்ற அன்னையைப் பேணிக் காப்பாற்றாமல் விடுவதும் துன்பமாகும் என்று மனித வாழ்வில் துன்பத்துக்குரிய நான்கு விடயங்களைக் கூறி நீதி புகட்டும் கீழ்க்காணும் பாடல் இந் நூலில் வருகிறது.

ஆன்றவித்த சான்றோருட் பேதை புகலின்னா
மான்றிருண்ட போழ்தின் வழங்கல் பெரிதின்னா
நோன்றவிந்து வாழாதார் நோன்பின்னா வாங்கின்னா
ஈன்றாளை யோம்பா விடல்.

நாற்பது என்னும் எண் தொகையால் குறிக்கப்பெறும் நான்கு கீழ்க்கணக்கு நூல்களில் கார் நாற்பதும், களவழி நாற்பதும் முறையே அகம், புறம் பற்றியவை. இன்னா நாற்பதும் , இனியவை நாற்பதும் அறம் உரைப்பன. இவ்விரண்டும் முறையே துன்பம் தரும் நிகழ்ச்சிகளும் இன்பம் தரும் செயல்களும் இன்னின்ன எனத் தொகுத்து உரைக்கின்றன. நூலுக்குப் புறம்பான கடவுள் வாழ்த்திலும் கூட 'இன்னா', இனிதே என்னும் சொற்கள் அமைந்துள்ளன. இன்னா நாற்பதில் கடவுள் வாழ்த்து நீங்கலாக நாற்பது பாடல்கள் உள்ளன. ஒவ்வொரு பாடலிலும் நான்கு கருத்துக்களைக் கொண்டு , ஒவ்வொன்றையும் 'இன்னா' என எடுத்துக் கூறுதலின் 'இன்னா நாற்பது ' எனப் பெயர்பெற்றது. இந்நூலை இயற்றியவர்


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

கபில தேவர். ஆசிரியர் தமது கடவுள் வாழ்த்தில் சிவபெருமான் , பலராமன், திருமால், முருகன் ஆகியோரைக் குறித்துள்ளார். இதனால் இவர் சமயப் பொது நோக்கு உடையவர் என எண்ண இடமுண்டு. சிறந்த வரிகள்: 1. தீமையுடையார் அயலிருத்தல் இன்னா 2. இன்னா ஈன்றாளை ஓம்பாவிடல் 3. அடைக்கலம் வவ்வுதல் இன்னா

## நூற்குறிப்பு

- ஆசிரியர் – கபிலர்
- கள்ளுண்ணாமையையும், புலால் உண்ணாமையையும் மிகவும் வற்புறுத்தவதால் சங்க காலக் கபிலர் அல்லர் என்பது தேற்றம்
- இவர் காலம் கிநான்காம் நூற்றாண்டு .பி.
- ஒருசில அறக்கருத்துகள் இதில் திரும்பத் திரும்ப வரக்காணலாம்.
- கடவுள் வாழத்தில் சிவன் , பலராமன், மாயோன், முருகன் ஆகிய நால்வரையும் குறிக்கின்றானர்.
- பலராமலைச் சுட்டுதல் சங்க காலத்தை ஒட்டிய குறிப்பை நல்குகிறது.

## பாவகை

- கடவுள் வாழ்த்து உட்பட 40 வெண்பாக்கள் இதில் உள்ளன இவையிவை . பாடல் .இன்னாதவை என ஒவ்வொரு பாடலிலும் வகுத்துரைக்கிறது– 164

## சிறந்த தொடர்கள்

- தீமையுடையார் அயலிருந்தல் இன்னா
- ஊனைத்தின்று ஊனைப் பெருக்குதல் முன்னின்னா
- இன்னா ஈன்றாளை ஓம்பாவிடல்
- அடைக்கலம் வவ்வுதல் இன்னா
- இன்னா பொருளில்லார் வன்மை பிரிவு
- இன்னா மறையின்றிச் செய்யும் வினை


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in